


மருந்துகளை அதிகமாகப் பாவிப்பதனால் பின்விளைவுகள் உருவாகி உடலும், உள்ளமும் பாதிப்பு அடையலாம், இதற்கும் மேலாக இருக்கும் ஆரோக்கியத்தையும் இழந்து புதிய நோய்களிற்கு ஆளாக வேண்டிவரலாம்.

MORDILLO

மருந்துகளின் பாவனையால் பாதிப்பா? அல்லது அதனால் வேதனைப்படுகிறீர்களா? அந்தப் பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெற வேண்டுமா? சோஸ்ற் நகரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:

**Herr D. E. Hauck**
**Suchtberatungsstelle der Diakonie**
**Nöttentor 2**
**59494 Soest**
**Tel.: 02921/13232**

**Frau K. Witt**
**Fachbereich Gesundheit**
**59494 Soest**
**Tel.: 02921/302151**

**Herr Drucks**
**Flüchtlingsberatungsstelle der Diakonie**
**Wildemannsgasse 5**
**59494 Soest**
**Tel.: 02921/9697755**

**Herr Hemmersbach**
**Am Vreithof 6 (Rathaus)**
**59494 Soest**
**Tel.: 02921/1032213**

# மருந்து




## மருந்தா
## அல்லது
## உயிர்கொல்லியா?

## மருந்துகளின் பாவனையால் ஆபத்து ஏற்படலாம்

மருந்து நோயைப் போக்கிக் கொள்ளவே தவிர நோயைத் தோற்றுவிக்க இல்லை.

தொடர்ந்து மருந்துகள் பாவிப்பதனால் பின்விளைவுகளும் பாதிப்பும் ஏற்படலாம்.

உடலில் நோய் ஏற்பட்டால் அந்த நோயினைப் போக்குவதற்கான மருந்தினை மட்டும் உட்கொள்ள வேண்டும். வேறு எந்தக் காரணங்களிற்காகவும் மருந்தை உட்கொள்ளக் கூடாது.



## கீழ்க்கண்ட வினாக்களிற்கு ஆம் என பதிலளிப்பீர்கள் எனில் உங்களிற்கு மருந்து சம்பந்தமாக ஆலோசனைகள் உதவிகள் தேவை.

- நீங்கள் தொடர்ந்து மருந்துகள் பாவிக்கிறீர்களா? வைத்தியர் கொடுத்த அளவை விட அதிகமாகப் பாவிக்கிறீர்ளா?
- இரகசியமாக மருந்துகள் பாவிக்கும் பழக்கம் இருக்கிறதா?
- உங்களை நீங்களே ஏமாற்றியும், பிறருக்கு மறைத்தும் நீங்கள் உட்கொள்ளும் மருந்துகளின் அளவை மாற்றிப் பாவிக்கிறீர்களா?
- உங்கள் நண்பர்களிடமோ, குடும்பத்தினர்களிடமோ, உறவினர்களிடமோ மருந்துக்காகக் கெஞ்சுகிறீர்களா?
- உங்கள் வருத்தங்களிற்காக வைத்தியர் மருந்தெழுதவில்லை என வைத்தியர் மீது குறைகண்டீர்களா?